www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



18) வழங்கல் வழியில் உள்ள முதல் இடைநிலையர் யார்?
அ) மொத்த வியாபாரி ஆ) உற்பத்தியாளர் இ) சில்லறை வியாபாரி ஈ) வாடிக்கையாளர்கள்

19) உற்பத்தி துறையின் கீழ் ஒரு குறு நிறுவனத்தின் முதலீட்டு உச்ச வரம்பு ______ லட்சத்திற்கு மிகக்கூடாது
அ) 10 ஆ) 20 இ) 25 ஈ) 50

20) உட்புற நிதி மூலத்திற்கு எடுத்துக்காட்டு ______
அ) கடனாளிகளிடமிருந்து பெறப்படும் தொகை
ஆ) வணிக வங்கி கடன்
இ) பங்கு வெளியீட்டின் மூலம் பெறப்படும் தொகை
ஈ) தொழில் நிறுவனத்திற்குள் திரட்டப்படும் நிதி

பகுதி-ஆ 7×2=14

II. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண்.30க்கு கட்டாயம்.

21) உற்பத்தித் தொழில் என்றால் என்ன?
22) பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?
23) தொழிற்துறை வங்கிகள் பற்றி நீவிர் அறிவது யாது?
24) தொழில் செயல்முறை புறத்திறனீட்டல் (BPO) என்றால் என்ன?
25) நன்நெறி என்றால் என்ன?
26) புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கம் என்ன?
27) சிறப்புப் பண்டகசாலைகள் என்றால் என்ன?
28) சரக்காணை என்றால் என்ன?
29) இந்திய ஒப்பந்தச் சட்டம் எத்தனை பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அவை யாவை?
30) வருமானம் என்ற சொல்லுக்கு வருமானவரி சட்டத்தின் எந்த பிரிவு இலக்கணம் வழங்கியுள்ளது?

பகுதி-இ 7×3=21

III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண்.40க்கு கட்டாயம்.

31) பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?
32) இந்துக் கூட்டுக் குடும்பத் தொழிலின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றை விவரி.
33) மின்னணு வங்கியியல் என்றால் என்ன?
34) காப்பீட்டின் வரைவிலக்கணம் தருக.
35) சமூகப் பொறுப்புணர்வின் வகைகளை வரிசைப்படுத்துக.
36) அந்நிய நேரடி முதலீட்டின் ஏதேனும் மூன்று தீமைகளை விளக்குக.
37) சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.
38) சார்க் அமைப்பின் பணிகள் யாவை?
39) எந்தெந்த வழக்குகளில் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிக்கலாம்?
40) நபர் என்ற சொல்லில் யாரெல்லாம் அடங்குவர்?

பகுதி-ஈ 7×5=35

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:-

41) வணிகத்தின் பல்வேறு தடைகளை விளக்குக. (அல்லது)
ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பியல்புகளை விவரி?

42) கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கங்கள் யாவை? (அல்லது)
பெருநிறுவன ஆளுகையின் நன்மைகளை குறிப்பிடுக.

43) இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக. (அல்லது)
உலகளாவிய வைப்பு இரசீதிற்கும், அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

44) மொத்த வியாபாரிகளின் பணிகள் யாவை? (அல்லது)
அரசு நிறுமங்களின் சிறப்பியல்புகள் யாவை?

45) உலக வர்த்தக அமைப்பின் நோக்கங்கள் யாவை? (அல்லது)
ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.

46) ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (அல்லது)
காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி?

47) சரக்கு மற்றும சேவை வரியின் வகைகளை விளக்குக. (அல்லது)
அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?

******

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

